MISSION PRESS 1840

சர்வேவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

14-04-2019	சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி	1	விகாரி வருடம் சித்திரை 1	வருட சந்தா ₹150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 56	இதழ் 15 பக்கம்-12	e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com	Ph: 0413/ 2334360	ஆசிரியர்:அருள்தந்தை C. அந்தோனி ரோச்

இந்திய கத்தோலிக்க ஆயர் பெருமக்களுக்கு இந்திய ஆயர் பேரவைத் தலைவர் மும்பை மேமிகு கர்தினால் ஆஸ்வால்டு கிராசியஸ் அவர்கள் வழங்கும் மேய்ப்புப் பணி மடல்.

நமது இந்திய நாடு தேர்தல் சூழலுக்கு வந்துள்ளது. பொதுத் தேர்தலுக்கான நாட்களும் அறிவிக்கப்பட்டுவிட்டன. 11-4-2019 முதல் 19-5-2019 வரை நமது பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, மாபெரும் தேர்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்த நம் நாடு தயாராகி வருகிறது. உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாகிய நமது நாட்டில் நூற்றுக்கணக்கான லட்சக்கணக்கான மக்கள் வாக்களிக்க இருக்கிறார்கள். ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய இரு கண்டங்களின் ஒட்டு மொத்த கூட்டு மக்கள்தொகையையும் விட அதிகமானோர் வாக்களிக்க இருக் கிறோம். நமது நாட்டைப் பற்றி நாம் மிகவும் பெருமைப் படுகிறோம். தேர்தல் நடைமுறைகளை நவீனப்படுத்த ஒவ்வொரு அரசும் முயன்று வந்திருக்கிறது, இதனால் தேர்தல்கள் அமைதியாக நடைபெறுகின்றன. பிற நாடுகள் அவை தம் சூழலுக்கேற்ப ஏற்றுக் கொள்ளவும் பின்பற்றவும் நமது நாட்டு தேர்தல் வழிமுறைகள் ஒரு முன்மாதிரியாக அமைந்துள்ளன.

நமது மக்களின் மேய்ப்பர்கள் என்ற முறையில், ஆயர்களாகிய நாங்கள் உங்களுக்கு இம்மடலை வரைவது எங்கள் கடமையாகக் கருதுகிறோம். இதனால் நமது மக்கள் அனைத்து நல்லுள்ளங்களுடனும் கரம் கோர்த்துச் செல்வதன் மூலம், நமது சமூகம் நம் நாட்டின் எதிர்காலத்திற் கேற்ற ஒரு வடிவம் கொடுப்பதில் சிறந்த பங்களிப்பை நல்க இயலும் என்று நம்புகிறோம்.

கத்தோலிக்கத் திருச்சபை எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள வில்லை என்றும், எந்த ஒரு அரசியல் கட்சியையும் சார்ந்து இல்லை என்றும் தொடக்கத்திலேயே தெளிவாக்க விரும்பு கிறோம். இதுவே கத்தோலிக்க திருச்சபையின் வரை யறுக்கப்பட்ட கொள்கையாகும். இருப்பினும், இதற்கு முன் இடம் பெற்ற தேர்தல்கள் போலவே, நமது நாட்டின் நலனை முன்னிட்டு, நமது மக்களுக்கு சில பொதுவான வழிகாட்டு தல்களை வழங்க வேண்டும் என உணர்கிறோம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகளினால் நம் நாடு மிகப் பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. உள்கட்டமைப்புகளும், பொது மக்களுக்கான வசதிகளும் வெகுவாக வளர்ந்துள்ளன. விரைவாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தை நாம் பெற்றுள்ளோம். பல ஆண்டளவாக நிகழும் இந்த முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு அரசும் தனது பங்களிப்பை வழங்கி வந்துள்ளது. எதிர்காலம்பற்றிய பெரும் நம்பிக்கை இருக்கிறது. அதே வேளையில், நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய பல துறைகளும் இருக்கின்றன. செல்வந்தருக்கும், ஏழையருக்கும் நிலவும் பெரும் இடைவெளி இன்னும் அதிகமாக வளர்ந்து கொண்டே போவதாக தெரிகிறது. பல அமைப்பு சாராத தொழிலாளர்களும், அன்றாட தொழிலாளர் களும் தாங்கள் ஈட்டு வதைக்கொண்டு வாழ முடியாதவர்களாக இருக்கி றார்கள். விவசாயிகளும் வேளாண் துறையிலிருப் பவர்களும் மிகக் கடுமை யான அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். மேலும், சமூகத்தின் சமூக வழிகாட்டு கெள்கைகளான ஒழுக்கநெறிகள் அவற்றின் முதன்மைத் தன்மையை இழந்து வருகின்றன. பல முடிவுகளின் பின்னால் பொருளாதாரமே உந்து சக்தியாகத் திகழ்கிறது. இந்திய நாடு ஒரு ஆன்மீக நாடு, இருப்பினும் இறைவன் விளிம்புக்குத் தள்ளப்படுகிறார். இந்த சூழலில்தான், வரலாற்றின் இந்த தருணத்தில்தான் நாம் தேர்தல்களில் பற்கேற்க இருக்கிறோம்.

முதலாவதாக, நாம் வாக்கு அளிப்பது நம் கடமை என்பதை நினைவுபடுத்துகிறோம். பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு குடிமகனும் வாக்கு அளிக்கும் உரிமை பெற்றுள்ளார், மேலும் வாக்களிப்பது நம் நாட்டுக்கு நாம் ஆற்ற வேண்டிய கட்டாய புனித கடமையாகும். நமது பங்கு தந்தையர்கள் இந்த கடமையைப் பற்றி மக்களுக்கு வலியுறுத்திச் சொல்லும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஒவ்வொரு வாக்கும் மிக முக்கியமானது. எனவே, நாம் நம் ஒவ்வொருக்காகவும், நமது பிள்ளைகளுக்காகவும், நம் நாட்டிற்காகவும் இப்புனித கடமையை நிறைவேற்ற வேண்டும்; இதன் மூலம் நமது நாட்டின் எதிர்கால திசையை நாம் மேம்படுத்த நம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு சமூகமும் செபிக்கவும், அச்செபத்தில் நம் நாட்டுக்கு மிக நல்லது எது என்பதைக் கண்டுணரவும் நாம் வற்புறுத்துகிறோம். சாதுர்யமான முறையில் நாம் வாக்களிக்க வேண்டும். மக்களின் குரலுக்கு செவிசாய்க்கும், மக்களின் தேவைகளையும் கவலைகளையும் புரிந்து கொண்டு அதற்கு ஆக்கப்பூர்வமான பதில் தரும் தலைவர் களை இந்த பொதுத் தேர்தல் நமக்கு வழங்கும் என்று கத்தோலிக்க திருச்சபை நம்புகிறது. அதிகாரம் என்பது பணியாற்றுவது என்பதை புரிந்து கொள்ளும் தலைவர்கள் தான் இன்று நமக்கு தேவைப் படுகிறார்கள். எனவே,

1) ஏழைகளுக்கும், வாழ்வாதாரமிழந்து வாடும் மக்களுக்கும் உதவுதல், அவர்களின் மாண்புகாத்தல், அவர்கள் மேம் பாட்டுக்கு உழைத்தல், நாட்டைக் கட்டியெழுப்புவதில் அவர்களின் பங்களிப்பையும் வழங்க உதவுதல், இவற்றுக்கான பொருளாதாரத்திற்கு உழைத்தல் வேண்டும்.

தொடர்ச்சி 12-ஆம் பக்கம்.

ஆசிரியர் பேனா...

பாராளுமன்ற தேர்தல் வந்துவிட்டது! சீரிய சிந்தனை தேவை!! உறுதியுடன் வாக்களிப்போம்!!!

“மனதில் உறுதி வேண்டும்” என்றார் பாரதியார். இப்பொழுது அது நமக்கு அதிகம் தேவை. இந்த உறுதி, சீர்மிகு சிந்தனையில் உருவாகும் கருத்துருவாக்கத்தின் உறுதிப்பாடு ஆகும். நாம் சுதந்திரம் பெற்று எழுபது ஆண்டுகால ஜனநாயக வாழ்வு பயணத்தில், கடந்த ஐந்து ஆண்டுகால வாழ்வினை அவசியம் திரும்பிப் பார்க்க வேண்டிய சூழலில் இருக்கிறோம். அதற்கான இத்தருணம் நம்மை அழுத்துகிறது.

சமய, சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் நாம் அனுபவித்தவற்றை அலசிப்பார்க்க வேண்டும். இதுவரை ஏனோ தானோ என்றிருந்தாலும் இப்போது அது நம்மை கிடுக்கிப் பிடியாக நம் மனசாட்சியை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. ஒரு விதத்தில், வாழ்வா... சாவா... என்ற நிலைதான். அதிலும், சமய நிலை சிறுபான்மையினரான நமது இயல்பும், இயக்கமும், இருப்பும் கேள்விக்குறியாக்கப்படும் நேரமாக இருக்கிறது. அரசமைப்புச் சட்ட அடிப்படையிலான நமது உரிமைகள் காக்கப்பட சீரிய சிந்தனை கொள்வோம், உறுதியுடன் வாக்களிப்போம். நமது நாட்டின் அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, ஒட்டுமொத்த நாட்டின் நலனுக்காக பணிபுரிபவருக்கு வாக்களிப்போம். கடந்த பல தேர்தல்களில் சிறுபான்மையினரின் வாக்குகள் அரசை நிர்ணயம் செய்யும் சக்தியாக இருந்து வந்திருக்கிறது. சிறுபான்மையினரின் நலன்களையும் உணர்வுகளையும் மதித்து பணிபுரிய தயாராயிருப்போருக்கு வாக்கு அளிப்போம்.

கிறிஸ்தவம் தோன்றிய ஒருசில ஆண்டுகளிலேயே இந்தியாவில் வேரூன்றி விட்டது. எவரையும் அயல்நாட்ட வரென்றோ, வந்தேறிகள் என்றோ எவரும் சுலபமாக சொல்லி விட இயலாது. பல நூற்றாண்டுகளாக இந்த தேசம், இதன் வளங்கள், சமூகம், அரசியல், கல்வி, மருத்துவம், கலாச்சார வரலாற்று விழுமியங்களில் கிறிஸ்தவத்தின் பங்களிப்பு பிரமிப்பூட்டுவதாக உள்ளது. மதத்தின் பெயரால் உரிமை களை மறுப்பவர்களின் பின்னணிகளையும் நாம் அறிவோம். திரைமறைவு திட்டங்களை நிறைவேற்ற, கவர்ச்சிமிகு அறிக்கைகளையும் பொய்யான வாக்குறுதிகளையும், நிறை வேற்ற இயலாத வாக்குறுதிகளையும் அள்ளித் தெளிக்கின்ற போது விழித்துக்கொள்வோம். வாக்குக்குப் பணம் பெறுவது நம் உரிமைகளையே விற்பதாகும். பொன்னான நம் வாக்குகளை சிந்தனைத் தெளிவுடன் உறுதியாக பதிவு செய்வோம்.

ஜனநாயகம் முறையாக உயிரூட்டம் பெறவேண்டும். தேர்தல் நேரத்தில் காலில் விழுபவர்களின் வாக்குறுதிகளுக்கு பஞ்சமில்லை. தேர்தலில் தனி மனிதனின் ஒற்றை வாக்கு எத்துணை சக்தி வாய்ந்தது! ஒட்டுமொத்த 130 கோடி மக்களில் 90 கோடி மக்கள் வாக்களித்து பதிலாளர்களை தேர்ந்தெடுக் கிறார்கள். அனைத்து தரப்பினருக்கும் பணிபுரிய தேர்ந் தெடுத்து அனுப்பி வைத்தால், இவர்கள் எஜமானர்களையே அடிமைகளாக்கும் சக்தியாக தங்களை முந்நிலைப்படுத்திக் கொண்டு, ஐந்து ஆண்டுகள் மக்களை ஆட்டிப் படைத்து விடுகிறார்கள். ஐ.ஏ.எஸ். படித்த ஒருவர் தேர்தலில் நின்று வெற்றி பெற்ற எம்.எல்.ஏ. (அ) எம்.பி. ஆகலாம், ஆனால் குறைந்த கல்வியோடு (அ) கல்வி தகுதியில்லாமல் எம்.எல்.ஏ. (அ) எம்.பி. ஆகும் ஒருவர் ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆக முடியாது. ஜனநாயக ஆட்சியில் ஏன் இப்படி ஆனது? தனிமனித சுதந்திர மும் ஆளுமையும் மதிக்கப்படவும், அனைவரும் சம உரிமை பெறவும், நாட்டின் நலனையே இலக்காக்கி உழைக்கவும் வாழவும் இத்தகைய அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால், அவர் தனக்களித்த பணி அதிகாரத்தை பணம் பண்ணவும், சொத்து சேர்க்கவும், ஆள் சேர்க்கவும் தவறாக பயன்படுத்தி வருகிறார் என்றால், அவர் இன்னும் ஜனநாயகத்தை புரிந்துகொள்ளவில்லை என்று பொருள். சட்டம் ஒழுங்கை அந்த அதிகாரத்தில் தனக்கேற்ப வளைத்து விடுகிறார். மத உரிமை, பேச்சுரிமை, சிறுபான்மையினர் உரிமைகள் எதையும் மதிப்பதில்லை. பணம் மதிப்பிழப்பு, அவசரகதியில் GST வரிகள், நீட் தேர்வு நடைமுறைகள், எட்டு வழிச்சாலை திட்டங்கள் திணிப்பு, ஆபத்தான ரசாயன ஆலைகளுக்கு எதிராக போராடியவர்கள் மேல் வன்முறை-எல்லாவற்றையும் பார்த்துவிட்டோம்.

தேர்தல் சமயத்தில் ஊர் ஊராக சுற்றித் திரிந்து வாக்குகளை சேகரிப்பதும், வெற்றி பெற்றபின் வாக்களித் தவர்களை மறந்து, தன்னிச்சையாக செயல்படுவதும் ஜனநாயக விழுமியங்களுக்கு எதிரானது. வழிபாட்டுத் தலங்களில் மக்கள் அனைவருக்கும், பாதுகாப்பும், அமைதியும், நிம்மதியும் உறுதிசெய்ய வேண்டும். இதற்கு அரசு தரும் அமைதி முதல் சக்தியாக விளங்க வேண்டும். பெரும்பான்மை யினருக்கு ஒன்றும், சிறுபான்மையினருக்கு மற்றொன்றுமாக ஓரவஞ்சனை சட்டமியற்றுவதும், விளக்கம் கேட்டால் தேச துரோகமுத்திரை குத்துவதும் பேராபத்து ஆகும். பேச்சுரிமை, மதஉரிமை, கருத்துரிமை காக்கப்பட வேண்டும். அரசு தலைவர் என்பது ஒரு ஆளுமை, ஆட்சித் தலைவர் என்பது ஒரு ஆளுமை. அவர் தனிப்பட்ட ஒரு மதம், மொழி, எதனையும் சார்ந்து செயல்படுவதைத் தவிர்க்கும் போது, சமூகத்தில் உ ள்ள பிளவுகளும், பிரிவினைகளும் தானாக மறைந்துவிடும். குழந்தைகள், பெண்கள் அனைவரும் பாதுகாப்பு பெற வேண்டும்.

அனைத்து மக்களையும் ஒருங்கிணைக்கும் ஒற்றுமை, இணக்கம், மதிப்பு, சுதந்திர உணர்வு, மதச்சுதந்திரம் அனைத்தும் வளப்படுத்தப்பட வேண்டும். சுதந்திர போராட்ட நாட்களிலும் சுதந்திரம் பெற்றபொழுதும் நம்முன்னோர்கள் எத்துணை விழுமியங்களை கனவு கண்டிருப்பார்கள். அவற்றை மனதில் கொண்டு செயல்படுவோம். நாம் அனை வரும் சீரிய சிந்தனையுடன், உறுதியாக வாக்களிப்போம். ●

நம் கைகளிலிருந்து கீழே நழுவவிட வேண்டிய கற்கள் - திருத்தந்தை பிரான்சிஸ்

ஏப்ரல் 7, இஞ்ஞாயிறன்று, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை, அன்றைய நற்செய்தி வாசகத்தை மையப்படுத்தி கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். இயேசுவை, இறைச் சட்டத்திற்கு எதிரானவராகவோ, உரோமைச் சட்டங்களுக்கு எதிரானவராகவோ காட்டும் நோக்கத்துடன், விபச்சாரத்தில் பிடிபட்டப் பெண்ணை,பரிசேயரும், மறைநூல் அறிஞரும், அவரிடம்கொண்டு வந்தனர். சட்டத்தின் பாதுகாவலர்களாக தங்களையே எண்ணிக்கொண்டு, விபச்சாரத்தில் பிடிபட்டப் பெண்ணை பரிசேயரும் மறைநூல் அறிஞரும் இயேசுவிடம் கொண்டுவந்த வேளையில், மன்னிப்பின் வழியாக மீட்டு, ஒப்புரவின் வழியே புதுப்பிக்கும் இறைவனின் கருணையை இயேசு வெளிப்படுத்தி, அப்பெண்ணை மீட்டதைக் காண்கிறோம். இயேசு, இவ்வுலகிற்கு தீர்ப்பு வங்க வரவில்லை, மாறாக, இவ்வுலகை மீட்கவும், புதுவாழ்வை வங்கவும் அவர் வந்தார் என்பதை, இப்பெண்ணை காப்பதற்கு மேற்கொண்ட அணுகுமுறை நமக்குத் தெளிவாக காட்டியுள்ளார். உங்களுள் பாவமில்லாதவர் முதல் கல்லை எறியட்டும் என்று இயேசு கூறியது, நாம் அனைவருமே பாவிகள் என்பதையும், மற்றவர்களை நோக்கி நாம் மேற்கொள்ளும் புறம கூறுதல், தீர்ப்பிடுதல், தரம் தாழ்த்தல் போன்ற கற்களை கைகளிலிருந்து கீழே நழுவவிட வேண்டும் என்பதையும் உணரவைக்கும் சொற்களாக உள்ளன இவ்வாறு கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ். - வத். செய்தி.

இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறு (21-04-2019)

"விழுமியங்கள் உயிர்த்தெழட்டும்"

எசா.50:4-7 பிலிப்.2:6-11 லூக்.22:14-23:56

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.

அனைவருக்கும் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள். இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்துவ இறைநம்பிக்கையின் அடிப்படை. இந்த இறைநம்பிக்கை உண்மையின் மீதுதான் கிறிஸ்துவம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இயேசு பாடுபட்டு, சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதும், இன்றும் அவர் உயிரோடு வாழ்கிறார் என்பதும்தான் நம்முடைய கிறிஸ்துவ இறைநம்பிக்கையின் மைய மறையுண்மை. கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நமது நம்பிக்கையும், நற்செய்தியும் பொருளற்றதாகிவிடும்... என்கிறார் புனித பவுலடியார் (1கொரி.15:14-15). தொடக்க காலத் திருச்சபையிலிருந்தே ஒரு விழா கொண்டாடப்படுகிறதென்றால் அது இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாதான். இயேசுவின் உயிர்ப்பு அறிவு கொண்டு அலசிப் பார்க்க வேண்டிய ஒன்று அல்ல. மாறாக அது நம் வாழ்வின் அனுபவமாக்கப்பட வேண்டிய ஒன்று. "இயேசுவே ஆண்டவர் என்று வாயார அறிக்கையிட்டு இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூற நம்பினால் மீட்பு பெறுவீர்கள் (உரோ.10:9). எனவே இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா அவரை நம்பவும், அவரை அறிக்கையிடவும் நம்மை அழைக்கிறது. அறிக்கையிடுவது என்பது இயேசுவின் படிப்பினைகளை, விழுமியங்களை வாழ்வாக்குவது. எனவே இயேசுவின் விழிமியங்களை நாம் கடைபிடிப்பதன் மூலமாகத்தான் நாமும் இயேசுவின் உயிர்ப்பிலே உண்மையாகவே பங்கேற்கிறோம்.

முதல்முதலாக அவர் இங்கு இல்லை: மனித வரலாற்றிலேயே கல்லறைக்கு காவல் இருந்தார்கள் படைவீரர்கள், காவலர்கள். ஆண்டவரின் உயிர்ப்பை யார் எதிர்பார்த்தது? இயேசுவோடு உண்டு, உறங்கி, உறவாடி மூன்று ஆண்டுகள் அவரோடு பயணம் செய்த இயேசுவின் சீடர்கள் அல்ல. மாறாக தங்களையே எதிரிகளாக்கிக்கொண்ட பரிசேயர்கள், சதுசேயர்கள், தலைமை குருக்கள், மறைநூல் அறிஞர்கள், பிலாத்து இவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஆண்டவர் உண்மையாகவே உயிர்த்தார். வெற்றுக் கல்லறைதான் நம் அனைவரின் சந்தேகத்திற்கும், கேள்விகளுக்கும் பதில். யாராவது இறந்தால் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலே அவருடைய பெயர், பிறந்த நாள், இறந்த நாளை குறிப்பிட்டு இருப்பார்கள். மேலும் RIP என்றும் எழுதியிருப்பார்கள். ஒரு சில புகழ்பெற்ற மனிதர்களின் கல்லறைகளிலும், மகாத்மாக்களின் கல்லறைகளிலும் இவ்வாறு எழுதி வைப்பது மரபு. எடுத்துக் காட்டாக "ஆசிய ஜோதி இங்கே துயில் கொள்கின்றது" என்பது நேருவின் கல்லறை வரிகள். "இவன் ஒரு தமிழ் மாணவன்" என்பது போப்பையரின் கல்லறை வரிகள். ஆனால் இயேசுவின் கல்லறைக்கு மேல் எழுதி வைக்கவேண்டிய வரிகள் 'அவர் இங்கு இல்லை'. ஆம்! உண்மையாகவே இயேசு அங்கு (கல்லறையில்) இல்லை, உயிர்த்தெழுந்து நம்மோடு என்றும் வாழ்கிறார். எனவேதான் புனித பவுல் அடிகளார் 'வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார்' (கலா.2:20) என்றார்.

அவர் மீண்டும் வருவார்: வாரத்தின் முதல் நாள் என்பது ஞாயிற்றுக்கிழமை. யூதர்களுக்கு ஓய்வுநாள் சனிக்கிழமை ஓய்வுநாள் முடிந்தவுடன் விடியற்காலையிலேயே மகதலா மரியா கல்லறைக்குச் செல்கிறார். இயேசுவின் உடலைக் காணவில்லை என்றவுடன் அவர் திரும்பி வந்து பேதுருவிடமும், யோவானிடமும் சொல்கிறார். இன்றைய நற்செய்தியில் (யோவான் நற்செய்தி) யோவான் அங்குத் துணிகளையும் இயேசுவின் தலையை முடியிருந்த துண்டையும் கண்டதாகவும், அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்ததாகவும் வாசிக்கிறோம். விவிலியத்தில் இதற்கு பொருள் இருக்கிறது. பாலஸ்தீனப் பகுதியில் தலைவர் வீட்டிலே சாப்பிடும்போது கைதுடைப் பதற்கான துணி மேசையின் மீது வைக்கப்பட்டிருக்கும். அவர் சாப்பிட்டவுடன் கைத்துணியைக் கொண்டு துடைத்துவிட்டு அதை மீண்டும் மடித்து வைத்துவிட்டுச் சென்றுவிடுவார். ஒருவேளை சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதே யாராவது வந்தால் அத்துணியை அப்படியே மடிக்காமல் சுருட்டிப் போட்டுவிட்டுச் சென்று விடுவார். இதனுடைய பொருள், அவர் மீண்டும் வருவார் என்பதாகும். இதைத்தான் தி.ப.1:11ல் வாசிக்கின்றோம். "கலிலேயரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே நிற்கிறீர்கள்? இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததைக் கண்டீர் களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்." ஆகவே துணி சுருட்டி வைக்கப்பட்டிருந்தது என்பது இயேசு மீண்டும் வருவார் என்கிற செய்தியை நமக்கு உறுதியாக தருகிறது.

வீழ்ந்தாலும்-விழுமியங்களே!: புனித பவுலடிகளார் "எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கின்றேன். எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைக்கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு" (பிலி.4:13) என்று கூறி இயேசுவின் இறையரசு விழுமிய தொடர் ஓட்டத்திற்கு உயிர்தந்தார். இந்த விழுவிய தொடர் ஓட்டத்தை செவ்வனே ஓட தனது அடியார்களுக்கு தெளிவினைத் தருகிறார். "கடவுள் நமக்குக் கோழையுள்ளத்தினை அல்ல. வல்லமையும் அன்பும் கட்டுப் பாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கி உள்ளார் (2திமோ. 1:7-8). எனவே நாம் வீழ்ந்தாலும், வீழ்த்தப்பட்டாலும் பின்வாங் காமல் மன உறுதியோடு இறையரசின் விழுமியங்களைத் தூக்கிப்பிடிப்போம்.

விழுமியங்கள் உயிர்த்தெழட்டும்: இயேசுவின் உயிர்ப்புக்கு மிகப்பெரும் சாட்சி-சீடர்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றம். இவர்களுக்கு எங்கிருந்து வந்தது இந்த துணிவு? எப்போது / எப்படி ஏற்பட்டது இந்த மனமாற்றம்? உயிர்த்த இயேசு கொடுத்த உத்வேகம் இது. இயேசு உயிர்த்திரா விட்டால், இந்த துணிவும், வீரமும், நற்செய்தி அறிவிக்கும் ஆர்வமும் இயேசுவுக்காகத் துன்பங்களைத் தாங்க உள்ள உறுதியும் இவர்களுக்கு எப்படி ஏற்பட்டிருக்க முடியும்? எனவே சீடர்களின் வாழ்வு மாற்றம்தான் இயேசுவின் உயிர்ப்புக்கு உன்னதமான சாட்சியம். இன்று சமூகம், பொருளாதாரம், நாகரிகம், பண்பாடு போன்றவற்றில் மனிதன் அதிவேகத்தில் வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கிறான். ஆனால் அதற்கு மாறாக மனிதனின் சிந்தனையும், செயல்பாடும் மாறிக் கொண்டிருக்கிறது. சுயநலம், நுகர்வுக் கலாச்சாரம், பொறாமை, போட்டி மனப்பான்மை, விட்டு கொடுக்காமை போன்றவற்றில் மனிதன் வளர்ந்துகொண்டிருக்கிறான். இத்தகைய சூழ்நிலையை அடியோடு அழித்து உயிர்த்த இயேசுவின் விழுமியங்களான அன்பு, மன்னிப்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றை நம் வாழ்வில் நிறைவாக வாழ்ந்துகாட்ட வேண்டியது நம் கடமையாக இருக்கிறது. இன்று இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவை கொண்டாடும் நமக்கு இந்த சவால் தரப்படுகிறது. இயேசுவின் உயிர்ப்பை நம்புவதோடு மட்டுமல்லாமல் அது நம் வாழ்வில் வெளிப்பட வேண்டும். இதைத் தான் இயேசுவின் சீடர்கள், அவர்களைத் தொடர்ந்து மறைசாட்சிகள் மற்றும் புனிதர்கள் செய்தார்கள். எனவே நாமும் இயேசுவின் உயிர்ப்பின் மக்களாக வாழ வேண்டுமா? உயிர்த்த இயேசு நம்மில் வாழ வேண்டுமா? இயேசுவின் விழுமியங்கள் நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும், சமுதாயத்திலும் உயிர்த்தெழட்டும். ●

இயேசுவின் கேள்விக்கென்ன பதில்? (21)

ME Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

92.நன்மையைப்பற்றி என்னை ஏன் கேட்கிறீர்? (மத் 19:17)

நிலைவாழ்வைப் பெற என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு இயேசு தந்த பதில் மேற்கூறிய கேள்வி. கேட்க வந்தது நிலைவாழ்வைப் பெற வழி. ஆனால் இயேசுவைப் புகழ்ந்தால்தான் வழி சொல்வாரா? ஆனால் அவரோ வழி சொன்ன போது பின் வாங்குகிறார்: நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும். என்றார்.

93.நான் நல்லவன் என ஏன் சொல்கிறீர்? (லூக் 18:19)

இந்தக் கேள்வியால் தான் நல்லவர் என்பதை இயேசு மறுக்கவில்லை. கடவுள் என்ற முறையிலும் மனிதன் என்ற முறையிலும் அவர் நல்லவரே. மேலும் அடுத்து அவர் கூறுகிறார்: கடவுள் ஒருவரே நல்லவர். நன்மையைத் தவிர வேறு எதுவும் அவரிடம் இல்லை. செல்லும் இடங்களில் எல்லாம் நன்மையையே செய்துகொண்டு சென்றார் என்று நற்செய்தி கூறுகிறது.

அவர் தொடக்கத்தில் இருந்தும், அடிப்படையிலும், முழுமையாகவும், இயல்பிலும் நல்லவராகவே இருக்கிறார். அப்படியிருக்க ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்?

புகழ்ச்சி அனைத்தும் கடவுளுக்கே உரியது. நல்லவர் என்ற பெயர் வாங்க நாம் போடும் வேடங்கள் எத்தனை! அணியும் முகமூடிகள் எத்தனை!

94. தந்தையின் சொற் படி பல நற்செயல்களை உங்கள் முன் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றுள் எச்செயலுக்காக என் மேல் கல்லெறியப் பார்க்கிறீர்கள்? ((யோவான் 10:32)

இயேசு குறிப்பிடும் நற்செயல்கள்: எல்லாவித நோய்களையும் குணமாக்கியது, பேய்களை விரட்டியது, காது கேளாதோரைக் கேட்கச் செய்தது, ஊமையரைப் பேசச் செய்தது. பார்வையற்றோருக்குப் பார்வை அளித்தது. எல்லாவற்றுக்கும் மேலாகத் தம் தந்தையை அறிவித்தது. இப்படி எத்தனையோ.. அதில் எவற்றுக்காக கல்லெறியப் பார்க்கிறீர்கள்? என்கிறார். மோசே சட்டம் எதையாவது அவர் மீறி இருக்கிறாரா? ஏன் என்ற கேள்விக்கு அவர்கள் தந்த பதில் நற்செயல்களுக்காக அல்ல, கடவுளைப் பழித்துரைத்ததற் காகவே உன் மேல் கல்லெறிகிறோம். ஏனெனில் மனிதனாகிய நீ உன்னையே கடவுளாக்கிக் கொள்கிறாய் என்றார்கள்.

பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றிகெட்ட நிலையே மிக மோசமானது. அப்படியிருக்க அவரைக் கல்லெறியத் தேடுவது அதைவிட இழிவான குணம்.

104 .**நீங்கள் தெய்வங்கள் என நான் கூறினேன் என்று உங்கள் மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா?** (யோவான் 10:34)

ஆம், என்றுதான் பதில் சொல்ல வேண்டும். மறை நூலிலேயே எழுதியுள்ளதை மறுக்க முடியுமா? இயேசு விவிலியத்தைத் தக்க இடத்தில் மேற்கோள் காட்டுவதைப் பார்க்கும்போது அவர் எவ்வளவு மறைநூலைக் கற்றிருக்க வேண்டும். இது நம்மையும் விவிலியத்தை வாசிக்கத் தூண்டுகிறது.

நீதிபதிகள் அவர்களுடைய கௌரவத்தின் பொருட்டுக் கடவுளர்கள் என்று அழைக்கப்பட்டனர். மேலும் வி.ப. 4, 7, 18, 21, 22, மற்றும் இணைச்சட்டம் 1. 1சாமுவேல் 28, திருப்பாடல்கள் 82, 45 ஆகிய பிரிவுகளில் மக்கள் கடவுளர்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர். அடுத்து வரும் கேள்வியில் இயேசுவே விளக்கம் தருகிறார்.

105.கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்ட வர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள் மறைநூல் வாக்கு என்றும் அழியாது. அப்படியானால் தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட நான் என்னை இறைமகன் என்று சொல்லிக் கொண்டதற்காக இறைவனைப் பழித்துரைக்கிறாய் என நீங்கள் எப்படிச் சொல்லலாம்? (யோவான் 10:36)

கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டவர்களே தெய்வங்கள் என்றால் தந்தையால் அர்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட நான் என்னை இறைமகன் என்று சொல்லிக்கொண்டதற்காக இறைவனைப் பழித்துரைக்கிறாய் என நீங்கள் எப்படிச் சொல்லலாம்?

நியாயத்திற்கு முன் தலைவணங்க அழைக்கும் கேள்வி இது. ஆனால் அவர்களோ அவர் மீது கல்லெறியப் பார்த்தனர். அவரோ தப்பிச் சென்றுவிட்டார். நமது வாழ்வில் நிகழும் விவாதங்களில் நியாயத்திற்குத் தலைவணங்கி ஏற்போமா?

106. **பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் உண்டு அல்லவா?** (யோவான் 11:9)

இந்தக் கேள்வியைத் தொடர்ந்து இயேசு கூறுவது: பகலில் நடப்பவர் இடறி விழுவதில்லை. ஏனெனில் பகல் ஒளியில் பார்க்க முடிகிறது.

இதைக் கூறுமுன்னர் இலாசர் நோயுற்றிருக்கிறார் என்று கேள்விப்பட்டுத் தம் சீடரிடம் மீண்டும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்று கூறினார். அங்குதான் யூதர்கள் இயேசு மீது கல்லெறிய முயன்றார்கள். எனவே சீடர்களுக்கு அங்குச் செல்ல பயம். அந்தச் சூழலில் இயேசு இவ்வாறு கூறினார். அதாவது பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் உண்டு என்பது எல்லோரும் அறிந்ததுதான். அதன் உட்பொருள் என்னவென்றால் பகலுக்குப் பின்தான் இருள் வரும். இயற்கையாக வரும் அந்த இருள் கூட பன்னிரண்டு மணிநேரம் கடந்துதான் வரும். எனவே நமக்கு வர இருக்கும் துன்பமும் அதற்குக் குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன் வராது என்பதுதான்.

107 .**உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார். இதை நீ நம்புகிறாயா?** (யோவான் 11:26)

நான் நினைக்கிறேன், எனவே உயிரோடிருக்கிறேன் என்கிறார் René Descartes என்னும் பிரஞ்சு சிந்தனையாளர். உயிரோடு இருக்கும்போது நினைப்பது மட்டுமல்ல, அப்போதுதான் நம்பிக்கை கொள்ளவும் முடியும், இறந்தபின் கடவுளை நேருக்கு நேர் காண்பதால் அங்கு நம்பிக்கை தேவை இல்லை. மனிதனாக நம்மில் ஒருவராகக் காணும் இயேசுவைக் கடவுள் என்று நம்புவதும் கடினம். அவ்வாறு உயிரோடு இருக்கும்போது நம்புவோருக்கு இயேசு சாகாவரத்தை வாக்களிக்கிறார்.

இதை நீ நம்புகிறாயா? இந்தக் கேள்வியை மார்த்தாவிடம் கேட்கிறார்.

மார்த்தா கொடுத்த பதில் ஒரு நம்பிக்கை அறிக்கை: **ஆம் ஆண்டவரே, நீரே மெசியா! நீரே இறைமகன்! நீரே உலகிற்கு வரவிருந்தவர் என நம்புகிறேன்.** நம்மைப்போல அச்சடித்த நம்பிக்கை அறிக்கையைக் கிளிப்பிள்ளை போல வாசிப்பவர் அல்லர் மார்த்தா. மூன்று முறை நீரே, நீரே, நீரே என்று கூறிவிட்டார். இந்த அறிக்கைக்குக் கைமேல் பலன் பெற்றுக்கொண்டார். இறந்து அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்கள் ஆனபின்னும் தன் சகோதரனை உயிரோடு பெற்றுக் கொண்டார். மலையைப் பெயர்க்கும் நம்பிக்கை! -தொடரும்

வழிபாடு: அடையாள மொழி

– சுவாமி ஆ. லூயிஸ்.

கடவுள் ஒருவர்தான் முழுமையான மெய்மை. படைப்பும் மனித குலமும் அம்மெய்மையின் அடையாளங்கள். எனவே நமது வாழ்வும் வழிபாடும் அடையாள மொழிகளாகும் என்பதை எப்போதும் உணர்வோம். நமக்குள் பூசலும் பிளவும் இல்லாமல் இருக்க வெளிப்படுத்தப்படும் அடையாளங்களில் தெளிவாகவும், புதைந்தும் இருக்கும் மெய்மைக்கு உடன்பட முயல்வோம்.ஒப்பிட்டுப் பார்க்காது ஒவ்வொன்றிலும் உறைந்திருக்கும் உண்மைக்கு உடன்படுவோம். வேறுபாடுகளை ஆவியின் பிரசன்னத்தில் ஒன்றுபடுத்து வோம். சுயநல சோதனைக்கு இடம் கொடுத்து உயர்வு தாழ்வு என்று கருதாமல் சமநிலையைக் காண்பது ஞானியின் பண்பாகும். விழிப்போடு நாம் இல்லை என்றால் சுயநலம் நம்மை சூரையாடும்.

திருப்பலி: "திருவழிபாட்டில் மிகச் சிறப்பாகத் தூய்மை மிகு நற்கருணைப் பலியில் நமது மீட்பு அலுவல் நடந் தேறுகிறது "வழிபாடு எண் 2. திருப்பலி நிதம் நடந்தாலும், பலத்திருப்பலி இடம் பெற்றாலும் திருப்பலிக்குரிய முக்கியத் துவத்தை ஒவ்வொரு கொண்டாட்டத்திலும் யாரும் இழந்துவிடவும் கூடாது, சடங்காகவும் கொண்டாடக்கூடாது என்பதில்தான் நமது நம்பிக்கை எண்பிக்கப்படுகிறது. முழுத்திருப்பலியில் இடம் பெறும் ஒவ்வொரு நிகழ்வும் முக்கியமானது. வருகைப் பாடல் முதல் இறுதிப்பாடல் வரை முழுமையாக அனைவரும் பங்கெடுப்பது தேவை.

வருகை பவனி, காணிக்கை பவனி, திருவிருந்து பவனி இடம் பெறுவதற்கு ஏற்ப பொருத்தமான பஜனைப்பாட வாய்ப்புண்டு. பலி செலுத்தும் குருக்கள் மக்கள் மத்தியில் இருந்து வருவது முறையாகும். ஆலயத்திற்குள் யாரும் மிதியடிகளைப் பயன்படுத்துவது முக்கியம். அருள்வாக்கை வாசகம் என்ற சமூகச் சொல்லைப் பயன்படுத்தாது, வழிபாட்டிற்குரிய சொல் அருள்வாக்கு என்று கூறுவது பொருத்தமானது. எடுத்துக்காட்டாக: "புனித பவுலடியார் உரோமைத் திருச்சபைக்கு எழுதிய திருமுகத்தில் இருந்து அருள்வாக்கு." அருள்வாக்கை முழக்கமிடுகின்றவர் பயிற்சி எடுத்து, தயாரித்து, தெளிவாக, கேட்கும்படி தனது கடமையை மேற்கொள்வதை பங்கு குருக்கள் கண் காணிப்பது முறையாகும். திருவழிபாட்டு பாடல்கள் நாட்டு பண்பாட்டிற்கு ஏற்ப, இதய மொழியாக வழிவரும் பஜனைப் பாடல்களைப் பாடுவது மேலானது. எல்லாரும் பாடுவதற்கு ஏற்புடையது பஜனையாகும். ஒலிப்பெருக்கியை எப்போது, எவ்வாறு, எப்படி பயன்படுத்துவது என்பதில் கவனம் செலுத்துவது முக்கியம். நமது சப்தம் மறறவர்கட்குத் தொந்தரவு தராமல் நமக்கு மட்டும் கேட்கும்படி இருப்பது தேவை. திருப்பலி வேளையில் பெரிய கோவிலில் சிதறிவிடாது, ஒன்றாக ஒரு வழிபாட்டு குடும்பமாக அமர்வது முக்கியம். திருப்பலி வேளையில், தகவல்தரும் போது விளம்பரம், வியாபாரம், பணம் இவைகளைப் பற்றி பேசாமல் தகவல் பலகையில் கோவிலுக்கு வெளியே பகிர்ந்து கொள்வது நல்லது. முக்கியமாக நன்மை வாங்கியப்பின் இயேசுவோடு அமைதியாக ஒன்றித்திருப்பது மிகவும் இன்று தேவைப்படுகிறது. கோவில் வழிபாட்டை ஒரு சமூகக் கொண்டாட்டமாக, படம்பிடிப்பது, பராக்கு வளர எப்போதும் அங்கும் இங்கும் நடமாடுவது எல்லாம் உகந்ததல்ல. உயிர்த்த ஆண்டவர் இயேசு அனுபவத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு வழிபாடு இடம் பெறுவதாக. வேறு எந்த காரியங்களையும், அறிமுகப்படுத்துவது, நன்றி சொல்வது, பொன்னாடை போர்த்துவது போன்ற காரியங் களை நாம் மேற்கொள்ளக்கூடாது. பங்கு மன்றத்தில் என்றால் மக்கள் வர மாட்டார்கள், கலைந்துவிடுவர் என்று கடமைக்குச் சில காரியங்களை கோவிலில் செயல்படுவது எவ்விதத்திலும் நாம் நியாயப்படுத்தக் கூடாது. ஆலயத் திற்குள் பேசுவது கூடாது. வழிபடும் இடம் புனிதமானது.

ஏனைய வழிபாடுகள்: அருட்சாதன கொண்டாட்டங்கள் எல்லாம் திருப்பலியை மையமாக வைத்து இடம் பெறுவதால், பிறமறையினர் ஒருசிலர் வருவதால், நிழற்படப்பதிவு அதிகமாவதால் அனைத்திலும் பங்குப் பொறுப்பாளர்கள் கவனமாக இருப்பது முக்கியம், பிற வரும் குருக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நாம் பாராமுக மாக இருக்க இடமில்லை. மெய்யடியார்கள் "ஆவியிலும் உண்மையிலும்" வழிபடுவார்கள் என்ற இயேசுவின் சொற்களை, வழிபாட்டு முறைகளை நாம் ஆழ்ந்த அனுபவத்திற்கு அழைத்துச் செல்வது முறையாகும். வெளிப்புலன்கள், உட்புலன்கள் இவைகளைத் திருப்தி படுத்துவதைவிட ஆன்ம திருப்திக்கு நாம் அனைவரையும் அழைத்துச் செல்வது மேலானது. நம்பிக்கையில்தான் ஒன்றுபட முடியும்.

"விழித்திருந்து செபியுங்கள்". நாம் உறங்கிவிடக் கூடாது, விழிப்போடு, கவனத்தோடு, தயாராக இருப்பது தேவை. இத்தகைய விழிப்புணர்வு கடவுள் மீது பதிந் திருப்பது தேவை. ஏனெனில் கடவுள்தான் எல்லாவற்றிலும் எல்லாரிலும் எப்போதும் பிரசன்னமாய் இருக்கிறார். விழிப்பாய் இல்லை என்றால் அலகை நம்மை அலைக் கழித்துவிடும். காவல் தூதர்கள் என்றால் நாம் உறங்கும் போதுகூட கவனமாய் காத்து வருவர். இறைப் பிரசன்ன உணர்வு தான் எல்லா வழிபாடுகளிலும் ஊடுருவி நம்மை உயிர்த்த ஆண்டவரின் அனுபவத்திற்கு அழைத்துச் செல்லும்.

உடலும் உள்ளமும் அடையாளம் என்பதால் மெய்மை யான நம்பிக்கை, உயிர், வாழ்வு என்பது உடலையும் உள்ளத்தையும் எப்போதும் கண்காணிப்பது முக்கியம். இன்றைய சூழலில் நாம் நிறையசோதனைகளைச் சந்தித்து வருகிறோம். எப்படியாவது அலகை உறங்காது நம்மை திசைத்திருப்ப மிகவும் தந்திரமாக, கவனமாக, ஈர்ப்பு சக்தியாக செயல்பட்டு வருகிறது. ஆவியின் ஆற்றலுக்கு சக்தி இருப்பினும், நமது சுதந்திரத்தை முன்னிட்டு நம்மை ஈர்க்காது ஆனால் உடன் இருக்கும். நாம்தான் சுதந்திர உணர்வோடு ஆவியின் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கடவுளின் இரக்கத்தால் இது இயலும் என உறுதியோடு பயணிப்போம்.

உமது அரசு வருக!: இயேசுவின் செபத்தில் இறைவனின் அரசு நமது இதயத்திலும், இல்லத்திலும், திருச்சபையிலும், நாம் வாழும் சமுதாயத்திலும் இடம்பெற வேண்டும் என்று அன்றாடம் செபிக்கின்றோம். இறைவன் இருக்கின்றார் என்பதில் ஐயமில்லை, அவருடைய இருப்பை உணர்வது தான் எல்லார்க்கும் தேவைப்படுகிறது. எனவேதான் காலை மாலை செபம் எல்லார்க்கும் தேவைப் படுகிறது. நண்பகலிலும் நாம் அவரை நினைப்பது உகந்தது. இவ்வாறு அவரது பிரசன்ன உணர்வை இழக்காமல் எப்போதும் அவரில் இருக்கவும் இயங்கவும் முற்படுவோம். நாம செபம், மனவல்லிய செபம் அல்லது பொருத்தமான செயல்கள் நம்மில் தொடர்ந்து இடம்பெற்றால் நன்மை பயக்கும். கடவுளைப் போல இரக்கம் உள்ளவர் வேறு யாருமில்லை, அவருடைய இரக்க உணர்வு பொங்கி வழிகின்றது. திறந்த மனதோடு நம்பிக்கையோடு அவரில் வாழ்வோம், வளர்வோம், உயர்வோம், ஒன்றுபடுவோம், ஒன்றுபட உதவுவோம். பொருள்மிகு அருள்வாழ்வு நம்மில் நாளும் வளர்வதாக. ●

வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு : சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது **இருபது நாட்களுக்குமுன்** பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

2019-2020 சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும்.

- ஆசிரியர்.

குருக்களின் மரியன்னை இயக்கம் - வரலாறு

குருக்களின் மரியன்னை இயக்கம் 1972-ம் ஆண்டு மே மாதம் 8-ம் தேதி அன்று தேவதாய் அருட்தந்தை ஸ்தேவானோ கோப்பி மூலமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் வெறும் மூன்று குருக்களோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கமானது இப்போது எல்லா நாடுகளிலும் திருச்சபையின் அங்கீகாரத்தோடு எண்ணற்ற குருக்களும் கன்னியர்களும் ஆயர்களும் திருத்தந்தையுடன் பொது மக்களோடு இயங்கி வருகிறது. இதனுடைய குறிக்கோள் தேவதாய் எப்படி தந்தையின் திருவுளத்தை 'ஆமென்' என்று கூறி தன் வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்ந்தாரோ அதே போல் நாமும் தேவதாயின் மாசற்ற இருதயத்தோடு இயேசுவின் திரு இருதயத்தின் மூலமாக தந்தையின் திருவுளத்திற்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்து அதன் வழியாகவே கிறிஸ்துவினுடைய உண்மையான பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்வதுதான் இந்த இயக்கத்தினுடைய குறிக்கோளாகும்.

அருட்திரு. J.M.**கிரகோரி லூயிஸ் ஜோசப்**

MMP - தேசிய இயக்குநர்.

குருக்களின் மரியன்னை இயக்கம் - செயல்பாட்டு முறை

இந்த இயக்கம் ஆரம்பமான முதலே 1972-ம் ஆண்டு முதல் டிசம்பர் 31 1997 வரையிலும், தொடர்ந்து தேவதாய் அருட் தந்தை ஸ்தேவானோ கோப்பி மூலமாக 604 செய்திகளை தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த செய்திகள் யாவும் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படி பரிசுத்தமாக வாழ்வது பற்றியும், இயேசு கிறிஸ்துவின் மூலமாக தந்தையின் திருவுளத்தை நம் வாழ்க்கையிலே நிறைவேற்றவும், தேவதாயின் மாசற்ற இருதயத்தின் மூலமாக நம்மை நாமே ஒப்புக்கொடுத்து அன்றாட கடமைகளையும் பரிசுத்த வாழ்க்கையிலும் நிறைவேற்றுவதில் பற்றி, இந்த செய்திகள் நமக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. ஆகவே தேவதாயின் அழைப்புக்கேற்ப நம்மை நாமே இந்த இயக்கத்திலே சேர்ந்து கொண்டு நம்மை முழுவதுமாக தேவதாயின் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்து, ஜெபமாலை மூலமாகவும் நட்புறவின் மூலமாகவும் நம்முடைய கிறிஸ்துவ கடமைகளை தேவதாயின் மூலமாக நிறைவேற்ற இந்த இயக்கத்தில் நாம் செயல்படுவோம்.

Bro. Dr. **டேனியல் டி.ஃபைன்**

MMP - தேசிய ஒருங்கிணைப்பாளர்.

கிறிஸ்தவர் வாழ்வுரிமை இயக்கம் புதுவை-கடலூர் கிளை

என் அன்புக்குரிய சகோதா, சகோதரிகளே, வணக்கம்,

நம் நாட்டின் 17வது பாராளுமன்ற தேர்தலுக்கு நம் தமிழகத்தில், வரும் 18ஆம் தேதி பெரிய வியாழன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. நம்முடைய பல்வேறு எதிர்ப்புக்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளும் தோல்வி அடைந்து வாக்குப்பதிவு தேதி மாற்ற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. ஆனால் நம்முடைய அன்றைய வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படாமல் கூடுதல் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று உயர்நீதி மன்றம் தேர்தல் ஆணையத்திற்கு வழிகாட்டுதல் வழங்கியுள்ளது.

இத்தகைய சூழலில் நமது சனநாயக கடமையான **"வாக்களித்து நமது ஆட்சியாளர்களை தேர்ந்தெடுப்பது"** என்பதை அனைவரும் செயல்படுத்த வேண்டும். மேலும் நமது பக்தி முயற்சிகளாலும். கண்டு கொள்ளாமையினாலும் வாக்களிக்காமல் இருக்கக் கூடாது. மேலும் சாதியுணர் வினாலும் பண ஆசையினாலும் நம் நிலைப்பாட்டிலிருந்து முரண்பட்டு செய்ல்படக் கூடாது. ஒருவேளை நீங்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகள் நம் நிலைப்பாட்டிற்கு எதிரணியில் இருந்தாலும், நம் கத்தோலிக்க திருச்சபையின் தீர்மானங் களுக்கு ஏற்ப நீங்கள் வாக்களிக்க வேண்டும் என நமது கத்தோலிக்க திருச்சபை பரிந்துரைக்கிறது. நீங்கள் தனிமனித சுதந்திரத்துடன் வாக்களிக்கும் உரிமை உங்களுக்கு இருந்தாலும் நம் நாடு, இனம், மொழி, கலாச்சாரம், மனசாட்சி உரிமை, பொருளாதார தரம், நம் மண்ணின் பாதுகாப்பு, வேலை வாய்ப்பு, பெண்கள் பாதுகாப்பு மற்றும் சிறுபான்மையினர் பாதுகாப்பு போன்றவைகளின் இன்றைய நிலைமைகளை தெரிந்துகொண்டு நீங்கள் வாக்களிக்க உதவி செய்வதற்காக இத்தீர்மானங்களை உங்கள் முன் வைக்கிறோம்.

தீர்மானங்கள்

கிறித்தவச் சமூகம், இம்மண்ணையும் மக்களையும் சார்ந்தது. இந்நாட்டின் உரிமைக் குடிமக்களாய், சுதந்திரம், நீதி, சமத்துவம், சகோதரத்துவம், மனித மாண்பு இவற்றில் கிறித்தவர்கள் ஆழமான பற்றுக் கொண்டவர்கள். இந்த மனிதகுல மதிப்பீடுகளை இந்திய அரசியல் சாசனம் உறுதி செய்கிறது. பல்வேறு இனத்தினர், சமயத்தினர், மொழியினர், மற்றும் பல்வேறு நம்பிக்கைக் கொண்டோர் நல்லிணக்கத்துடன் வாழ்வது இந்நாட்டின் மரபு. இப்பன்முகத் தன்மையின் அடிப்படை இந்நாட்டின் சமயச்சார்பின்மை மற்றும் சனநாயகம் ஆகும். இந்த அரசியல் சாசன அடிப்படைகளைப் பாதுகாத் தால் மட்டுமே மக்களின் வாழ்வுரிமைகளும் வாழ்வியலும் மேம்படும் என்பது அனைவரின் நம்பிக்கை.

- கடந்த ஐந்து ஆண்டுகளாய் மோடி அவர்களின் தலை மையிலான நடுவணரசின் நடவடிக்கைகள் இதற்கு மாறாக உள்ளன.

- இந்நாட்டின் பன்முகத் தன்மையைச் சிதைத்து, ஒற்றைக் கலாச்சரத்தை முன்னிறுத்தி, சமய அடிப்படையிலான அரசியலை முன்னெடுக்க அரசு முயல்கிறது. ஏராளமான மதக் கலவரங்கள், சிறுபான்மையினரின் அடையாளங்கள் மற்றும் நம்பிக்கைகள் மீதான தாக்குதல்கள் மக்களைப் பிளவுபடுத்த முயல்கின்றன. பசுப் பாதுகாப்பு என்ற பெயரில், பலர் தாக்கப்படுகின்றனர். சிலர் கொலை செய்யப்படுகின்றனர். எதை உண்பது, எதை உடுப்பது, யாரை மணப்பது, எதை நம்புவது, எதைப் பேசுவது, எதை எழுதுவது என அனைவரின் வாழ்விலும் அரசு மறைமுக ஆதரவு பெற்ற சில குழுக்கள் தலையிட முனைகின்றன. இயல்பாகச் சிலர் மதம் அல்லது நம்பிக்கையில் மாறுவது தேசவிரோதச் செயலாகச் சித்தரிக்கப்படுகிறது.

- தாம் கொண்ட நம்பிக்கை மற்றும் கருத்துரிமைக்காக பலர் கொல்லப்பட்டுள்ளனர். தலித்துகள், மற்றும் பெண்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இவற்றின் காரணமாய் இந்திய சமூகத்தின் நல்லிணக்கம் சிதைக்கப்படுகிறது.

- தன்னாட்சி (Autonomy) கொண்ட நிர்வாகம், நீதித்துறை, அரசின் புலனாய்வுத் துறை, ரிசர்வ் வங்கி போன்றவற்றில் அரசு குறுக்கிடுகிறது என குற்றம் சாட்டப்படுகிறது. அரசின் அமைப்புகள் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை.

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்..

6-ம் பக்கத் தொடர்ச்சி...

- கிறித்தவச் சமூகத்தின் தலித் பிரிவினருக்கு, மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டாமல், இந்து தலித் மக்களுக்கு நிகரான அரசியல் சாசனப் பாதுகாப்பை அளிக்க வேண்டுமென இந்திய திருச்சபை பல்லாண்டுகளாய்ப் போராடி வருகின்றது. இடஒதுக்கீடு 50 விழுக்காட்டைத் தாண்டக் கூடாது என்று காரணம் கற்பித்து அரசு எம்மக்களுக்கான சமூக நீதியை மறுத்து வந்தது. ஆனால் இன்று உயர் சாதியில் பொருளாதார அடிப்படையிலான 10 விழுக்காடு இடஒதுக்கீட்டிற்கான சட்டம் இயற்றி உள்ளது. இது சமூக நீதியை மறுப்பதோடு கிறித்தவர்களின் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாய் அமைந்துள்ளது.

- இந்தியாவின் கல்வித் திட்டத்தை மாற்றி அமைத்து, ஒற்றைக் கலாச்சாரத்தின் அடிப்படையில் கல்வியைக் கட்டமைக்க மத்திய அரசு முயல்கிறது.

- வளர்ச்சியை முன்னிறுத்தி 2014-ஆம் ஆண்டு ஆட்சியில் அமர்ந்த மத்திய அரசு அளித்த வாக்குறுதிகளில் அடிப்படையான பலவற்றை நிறைவேற்றத் தவறியுள்ளது. இதனால், விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், வியாபாரிகள், என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இளைஞர்களில் நான்கில் ஒருவர் வேலையில்லா திண்டாட்டத்தில் சிக்கித் தவிக்கின்றனர். அரசின் தொழிற்கொள்கை, ஜி.எஸ்.டி, ஏழை எளிய மக்களின் வாழ்வைப் பெரிதும் பாதித்துள்ளது. கருப்புப் பணத்தை ஒழிப்பதற்குப் பதிலாக பணமதிப்பிழப்பு வழியாக ஏழை எளிய மக்களின் வெள்ளைப் பணத்தை அரசு ஒழித்தது. இதனால் எளியோரின் வாழ்வு பாதிக்கப் பட்டது. பல சிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. அன்றாட வாழ்க்கைக்கான தண்ணீர், அரிசி, பருப்பு, காய்கறிகள், மருந்து இவற்றின் விலைவாசி ஏறியுள்ளது. ஊழல் எங்கும் தலைவிரித்தாடுகிறது.

- இதனால் மோடி அவர்கள் தலைமையிலான அரசு நீடிப்பதற்கான தார்மீக அடிப்படையை இழந்துவிட்டது. எனவே மதவாதக் கட்சிகளின் கூட்டணியை நாம் ஆதரிக்க முடியாது. அதற்கு மாற்றாக, தி.மு.க-காங்கிரஸ் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை நாம் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளோம்!.

அதே வேளையில், ஒவ்வொருவரின் தனிமனித சுதந்திரத்தையும் நாம் மதிக்கின்றோம். நம் முடிவை நாம் யார் மீதும் திணிப்பதில்லை. இன்றைய சூழலையும், நாடு சந்திக்கும் மேற்சொன்ன சவால்களையும், மக்களின் துயரங்களையும், சிறுபான்மையினரின் பாதுகாப்பையும், அரசியல் சாசன அடிப்படையிலான ஆட்சி முறையையும், மதிப்பீடுகளையும் பாதுகாத்திட ஒவ்வொரு தனிநபரும் தம் வரலாற்றுக் கடமையை உணர்ந்து, இத்தேர்தலில் வாக்களிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்!

அன்புக்குரியவர்களோ!

மேற்குறிப்பிட்டுள்ள தீர்மானங்கள், கடந்த 5 ஆண்டுகளாக நடந்த மைய அரசின் போக்குகள், நிலைப்பாடுகள், தவறுகள், அதனால் ஏற்பட்ட பின்னடைவுகள், சீரழிவுகள், பாதுகாப்பின்மை, தனி மனித உரிமை மறுப்பு, கருத்துச் சுதந்திர குரல் நெறிப்பு, ஏழைகள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினரின் பொருளாதார பின்னடைவு, பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் நம் நாட்டு வளமைகளை சுறையாடல், நமது இயற்கை சீரழிவு போன்றவைகளை விரிந்த அளவில் ஆய்வு செய்து, இவர்கள் மறுமுறை ஆட்சிக்கு வந்தால் ஏற்பட போகும் ஆபத்துக்கள், அதாவது பார்ப்பணிய இந்துக்களின் ஆதிக்கம், பன்னாட்டு தொழில் நிறுவனங்களின் சுரண்டல்கள், தேசிய இனங்கள் அழிப்பு, தேசிய மொழிகள் அழிப்பு, வறுமை, ஏழ்மை, விவசாய சீரழிவு, நீர் தட்டுப்பாடு, சாதி சமூக புதுப்பிப்பு, அறியாமை, அடிமை தனங்களின் மறுபிறப்பு போன்ற பொருளாதார, சமூக, அரசியல் சிதைப்புக்களை ஆய்வு செய்து, நம் கத்தோலிக்க திருஅவை எடுத்த தீர்க்கமான முடிவுகளே இவைகள். எனவே இந்த சமய அடிப்படைவாத நிலையுடைய மதசார்புடைய கூட்டணி அரசு ஆட்சியில் இருந்தால் நமக்கு, அதாவது இந்தியர்களுக்கு, தமிழர் களுக்கு, கிறித்தவர்களுக்கு. இஸ்லாமியருக்கு, பொளத்தர்களுக்கு, மேலும் தேசிய மொழியினங்களுக்கு ஏன் பாமர இந்துக்களுக்கும் பேராபத்தானது என கருதுகிறோம். எனவே அதற்கு ஏற்ப, மதசார்பற்ற சனநாயக கூட்டணி வேட்பாளர்கலில், யார் மதசார்புடைய சனநாயக கூட்டணி கட்சிகளில் உள்ள வேட்பாளர்களை தோற்கடிப்பார்களோ அவர்களுக்கு நமது வாக்கை அளிக்க வேண்டுமென கருதுகிறோம். பணத்தை தந்தோ, சாதிய உணர்வை தூண்டியோ கேட்கப்படும் வேட்பாளர்களை நிராகரியுங்கள்.

தேசத்தை காக்க வாக்களிப்போம்.

மனிதத்தை மீட்க வாக்களிப்போம். நன்றி,

அருட்தந்தை A. J. பிலோமின்தாஸ்
மறைமாவட்ட அரசியல் ஒருங்கிணைப்பாளர்
கிறித்தவ வாழ்வுரிமை இயக்கம் புதுவை கிளை

தொகுப்பு: ஆசிரியர்.

நமது பங்குகளில்: கக்கனூர்:

புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம், விழுப்புரம் மறைவட்டம் கக்கனூர் பங்கு (1936). நமது மறைமாவட்டத்தில் எங்கும் இல்லாத புதிய நவீன, கட்டமைப்பில் புனித லூர்து அன்னைக்கு புதிய கெபி ஒன்று உதயமாகி உள்ளது. 1986ஆம் ஆண்டு பங்குதந்தை அந்தோனி தும்மா அடிகளால் புனித லூர்து அன்னைக்கு கெரி கட்டப்பட்டு சிறப்பாக செயல்பட்டது. அனேக மக்கள் லூர்து அன்னை வழியாக பல புதுமைகளை கண்டனர். 2019ம் ஆண்டு அருட்தந்தை பெஞ்சமின் அடிகளார் வழியாக, சகோதரி கேத்ரின் ரோஸ் அவர்களின் நினைவாக டீக்கன் ஜம் அவர்களின் முயற்சியால் பழைய கெபி இடம் மாற்றம் செய்யப்பட்டு லூர்து அன்னைக்கு புதியதாக பிரம்மாண்டமான கெபி கட்டப்பட்டு மார்ச் மாதம் ஆயர் நீதிநாதன் அவர்களால் புனிதப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப் பட்டது. அன்று முதல் இன்றுவரை அனேக மக்கள் லூர்து அன்னையை தேடிவந்து அருள்பெற்று செல்கின்றனர். கிறிஸ்தவர்கள் அல்லாத பிறமத மக்களும் அன்னையின் கெபியை தரிசித்து அருள்வளமும் பொருள்வளமும் பெற்று மகிழ்கின்றார்கள். ஒவ்வொரு நாளும் காலை, மாலை அன்னையின் கெபியில் ஜெபமாலை வழிபாடும் மாதத்தின் முதல் சனிக்கிழமை எரியும் மெழுகு திரிகளுடன் அன்னைக்கு புகழ்மாலை ஜெப வழிபாடும், திருப்பலியும், அன்னையின் சிறப்பு மறையுரையும் நடைபெறுகின்றது.

இறைமக்கள் அன்னையின் கெபியை அண்டிவந்து அன்னையின் அருள் உதவியை பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கின்றோம்.

இவண் பங்குதந்தை,
கக்கனூர்.

உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.

22-ஆம் படலம்

வாதை 9– மீண்டும் ஆண்டவர் மோசேயிடம், எகிப்து நாட்டின்மேல் இருள் ஏற்படவும் இருளில் அவர்கள் தடுமாறவும் உன் கையை வானோக்கி நீட்டு என்றார். மோசே வானத்தை நோக்கித் தம் கையை நீட்டினார். மூன்று நாள்களாக எகிப்து நாட்டைக் காரிருள் கவ்வியிருந்தது. (விப.10:21–22).

காப்பியப் பாடல் 1090-

2 வெட்டுக் கிளிகளின் வாதை விலகிய நிலையில் மீண்டும் எகிப்தில் ஒன்பதாம் வாதையாகிய காரிருள் பரவ இறைவன் ஆணை பிறப்பித்தார்..

இப்படி யான சூழல் நிகழ்கையில்,
முப்பொழு தாளும் முழுமுதல் கடவுள்
மீண்டும் மோசே இடமவர் விரும்பி,
'ஈண்டு வாதை யொன்றது வந்து
எகிப்து நாட்டின் மேல்இருள் ஏற்பட,
திகிலுற் றனைவரும் தடுமா றுமாறு
உன்கரம் தன்னை வானை நோக்கி
நின்றிவண் நிமிர்ந்து நீட்டு' என்றார்.

காப்பியப் பாடல் 1091

3 இறைவனின் ஆணையின்படியே, மோசே அவரது கரத்தை வானை நோக்கி நீட்டவே, அப்பொழுதே காரிருள் எகிப்தைக் கவ்வியது.

கேட்டிறை வாக்கு அந்நொடிப் பொழுதே
நாட்டினைக் காரிருள் கவ்விடு மாறே
நீட்டினார் அவர்கரம் வானை நோக்கியே
ஈட்டியே பாயும் அதிமிக விரைவில்
காரிருள் பாய்ந்தது! கவ்விப் பரவி
ஊரினுள் யாருமே ஒருவரை ஒருவர்
பார்த்துப் பேசவே முடிந்திடா வாறே
நேர்ந்து, மூன்று நாளள வாக
நிறைந்திருள் நிற்க, இருளினுள் எகிப்து
மறைந்தது! அதுதன் தோற்றம் இழந்தது!

காப்பியப் பாடல் 1092

4 எகிப்தின் தோற்றம் முற்றிலும் மறைந்தது! எங்கும் காரிருள் பரவியது! இறைவனின் சாபம் காரிருளாய் எகிப்தியர் வாழ்விடத்தைக் கவ்விக் கதிகலங்கச் செய்தது.

எகிப்தே எங்கே உன்முகப் பொலிவு?
எகிறிக் குதித்துத் தாண்டவம் புரிந்தநீ
இருளின் பிடிக்குள் வீழ்ந்ததும் ஏனோ?
அருளின் முகவரி அருங்குறி இழந்து
குருட்டு எகிப்தாய்க் குன்றியே போனாய்!
இறைவனின் சாபம் இருளாய் வருங்காண்!
அறைந்திறை மகனைச் சிலுவையில் அன்று
நிமிர்ந்த போது நாடு முழுவதும்
திமிருக் கெதிராய்ப் பாய்ந்தது இருளே! (மத்.27:45)

காப்பியப் பாடல் 1093

5 "மூன்று நாள்களாக ஒருவரை ஒருவர் பார்க்கமுடியவில்லை. தான் அமர்ந்த இடத்திலிருந்து எவரும் எழும்பவும் இல்லை" (விப.10:23).

எகிப்தைக் கவ்விய இருளின் பிடியினால்
நெகிழ்ந்த நெஞ்சத் தாயோ தன்மகன்
முகந்தனைக் காண முடியாத் தவிப்பினால்
அகமது புலம்பும்! அடுத்தவர் காணத்
துடித்தே அழுதவர் குரலது எங்கும்
நெடிதாய் நீண்டு பரவிய தாலே
விலங்குகள் பயந்தே கத்தித் தீர்த்தன!
நிலபுலம் எங்கும் வாழ்ந்த பறவைகள்
ஒன்றை ஒன்று தேடிக் களைத்தன!
அன்று அவையெலாம் அஞ்சிக் கத்திய
கத்தலை நினைக்கையில் கவிதையே புலம்புமே!
எத்தனை வேதனை இதற்கெலாம் காரணம்
மனிதனின் அறிவுக் குருட்டுத் தனமே;
தனியொரு மனிதன் தருக்கும் போது,
இறைவனுக் கெதிராய் எழும்பும் போது
உறைந்திவண் வாழும் உயிர்கள் யாவும்
ஆழ்துயர் மூழ்கி அழுது களைத்துத்
தாழ்வுறல் என்றுமே தணித்திடா தறிமின்!

தொடரும்..

"திரு"ச் சிலுவை தரும் சிந்தனை

- வெட்டிவயல் வளவன்.

சென்ற இதழ் தொடர்ச்சி...

சிலுவை தண்டனை: அக்காலத்தில் குற்றவாளிக்கு தண்டனைகள் வழங்குவதில் பலமுறைகள் உண்டு. அதில் மரண தண்டனை என்பது ஒருவகை. அதிலும் பலவகைகளில் தண்டனை கொடுப்பதுண்டு. இருப்பிட நாற்காலியில் வைத்து மின்சாரம் பாய்ச்சி சாம்பலாக்குவது. கழுத்தில் கயிறு மாட்டி முகமூடி அணிந்து பள்ளம் தோண்டி இருபலகைகளால் நெருக்கி குற்றவாளியை மரணிக்க வைப்பது. இறப்பு ஊசி போட்டு தண்டிப்பது. இசுரவேலர் காலத்தில் கல்லால் எறிந்து கொல்வது. இப்படியாக குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. இயேசுவின் காலத்தில் மலை உச்சிக்கு கொண்டு சென்று கீழே தள்ளிக் கொன்று போடுவதுமுண்டு.

சிலுவையில் அறைந்து கொல்லும் பழக்கம் மெனிக்கேயர் ஆளுகையில் மத்திய கரைக் கடல் நாடுகளில் பரவியிருந்துள்ளது. சீதேயர்கள், பெனிக்கேயர்கள் தம் ஆட்சி யின் போது, அரசுக்கு எதிராக கலகம் செய்வோர், அரசின் நம்பிக்கைத் துரோகிகள் மற்றும் கொடூரக் கொலையாளிகள் ஆகியவர் களுக்கு சிலுவை மரணத்தண்டனை கொடுப்பது நடைமுறைக்கு வந்தன. கி.மமு.876 -ல் அசிரியாவில் அசூர், நரேபால் என்ற மன்னர் பெனிக்கேயர் நாட்டைக் கைப்பற்றி வரிக்கட்டச் செய்து சிலுவை மரணத்தை ஒழித்தார். அதன் பின்னர் வந்த அரசுரிமையாளர்கள் சிலுவை மரணத்தை புதுபித்தனர் என்பது ஆய்வாளர்கள் கூறுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. யூதர்களின் அரசுரிமை பெற்ற காலத்தில் கலவரம் செய்பவர் கள், மதநம்பிக்கையற்றவர்கள், துரோகமிழைப்பவர்கள் மற்றும் திருக்கோயிலுக்கு பங்கமிழைப்பவர்களுக்கு சிலுவை மரணம் என விதித்தனர். பின்நாளில் உரோமையர் ஆட்சியிலும் இத்தண்டனை வழங்கப்பட்டது.

அந்த நாளில் சிலுவை மரம் ஒலிவ மரத்திலிருந்து செய்யப்படும். அது "T" வடிவில்தான் செய்யப்படும். கிடைமட்டமாக கனமான மரத்துண்டில் 6 அல்லது 7 அடி நீளத்தில் செய்யப்படும். இதை குற்றவாளியின் கழுத்தில் வைத்து மாடுகளை உழவு நுகத்தடியில் தும்புமாட்டி கட்டுவதுபோல் இருகைகளையும் கட்டையின் T வடிவ இரு பக்கத்திலும் கட்டிவிடுவர். கனமான, பாரம்பொருந்திய கட்டை; ஆதலால் தலைதூக்கிப் பார்க்க இயலாது. தண்டனை நிறைவேற்றுமிடம் வந்ததும் தும்புக்கயிற்றை கழற்றிவிடுவர். ஏற்கனவே, அங்கு ஊன்றப்பட்டிருக்கும், பட்டமரத்தில் குற்றவாளியின் கால்களையும், கைகளையும் ஆணி கொண்டு இறுக்கி அடிப்பர். இருகால்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கியும், அல்லது தனித்தனியாகவும் ஆணிகள் கொண்டு அறைவதுண்டு. ஆண்டவராகிய இயேசுவுக்கு ஒன்றின்மேல் ஒன்று வைத்து அடுக்கி அக்கால்களைத் தாங்க சிறு கட்டை வைத்தும் அறைந்துள்ளனர். கால்களை இணைக்கும் ஆணி நீளமானது. கைகளை இறுக்கும் ஆணி நீளம் குறந்தவை ஆகும். ஒன்றுக்கு மேற்பட்ட குற்றவாளி களுக்கு சிலுவை மரணம் உண்டு. இயேசுவின் பாடுகளில் இரு திருடர்கள் உண்டல்லவா. நாற்றுக்குமேற்பட்டோர் எனவும் ஆய்வாளர்கள் சொல்கிறார் கள். அவர்களும் கொல்லப் பட்டனர்.

சிலுவை மரணக் குற்றவாளிகளுக்கு வலி, பயம் தெரியா திருக்க முதலில் மது (புளிப்புக்காடி) கொடுப்பதுண்டு. போதை மயக்கம் வரும்வரை காடியைக் கொடுப்பர். அதன் செலவை உறவினர்கள் ஏற்கவேண்டும். இத்தகைய கொடிய மரணத்தைக் காண அஞ்சி உறவினர்கள் வரஅஞ்சுவார். ஆனால், இயேசுவின் மரணத்தின்போது மக்கள் திரள் அதிக மிருந்ததாம். மக்கள் குரலெழுப்பி அழுதார்களாம். நாம் இன்று காணுகின்ற சிலுவை "✝" வடிவில் உள்ளது. "X" வடிவிலும் இருக்கும் எனச் சொல்லப் படுகிறது. குற்றவாளி ஒரு மணி நேரத்துக்குள் மரிக்கவில்லை யெனில், உயிர் இன்னும் உள்ளது என நினைத்து குற்றவாளியின் கைகள், கால்கள் முறிக்கப்பட்டு சிலுவை மரணம் நிறைவேற்றப் படும். (இயேசுவின் தொனி 2014 ஏப்ரல் ஆதாரம்) (மத்.27:32-44; லூக்23:26-43;யோ.23:44-49; யோவான்.23:44-49; யோ.19:28-30; மாற்கு.15:33-41).

- தொடரும்...

(122) இளம் உள்ளங்களுக்கு

கடவுளால் எல்லாம் இயலும்

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

தப்பித்தோம் பிழைத்தோம்: போர் முனையிலிருந்து பின்வாங்க நேரிட்ட போது ஓர் இளம் இராணுவ வீரன் மற்ற வீரர்களிடமிருந்து பிரிய நேரிட்டது. எதிரிகள் விடாமல் துரத்தி வந்தபோதும் அந்த வீரன் மிகவேகமாக தப்பித்து ஓடினான். மிகவும் களைப்புற்றிருந்த அவன் பார்வையில் வெகுநாட்களாக பயன்படாமல் கைவிடப்பட்ட வீடு ஒன்று தென்பட்டது. உடனே அந்த வீட்டை நோக்கி ஓடினான். வெகு வேகமாக உள்ளே தவழ்ந்து சென்று ஓர் அறையில் பதுங்கிக் கொண்டான். தற்காலிகமாக அவன் பாதுகாப்பாக இருப்பதாக நினைத்தாலும் எதிரிகள் அவன் இருப்பிடத்தை கண்டு பிடித்துவிட்டால் நிச்சயமாக அவனை கொன்று விடுவார்கள்.

புகலிடத்தில் புலம்பல்: தனக்கு ஏற்பட இருக்கும் முடிவை நினைத்து தனக்குள்ளே புலம்பினான். "ஆண்டவரே! என் உயிர் உம் கையில். நீர்தான் என்னைக் காப்பாற்ற முடியும்" என்று மனமுருகி வேண்டினான். அவன்செபித்து முடித்தபோது ஒரு சிலந்தி அவன் ஒளிந்திருந்த இருட்டறையின் வாயிலின் அருகே ஒரு வலை பின்ன ஆரம்பித்தது. இதை கண்ட அந்த வீரன் தனக்குள்ளே, "நான் துப்பாக்கி தோட்டாக்களிலிருந்தும், பீரங்கிக் குண்டுகளிலிருந்தும், என்னை காப்பாற்ற என் ஆண்டவரை மன்றாடினால், அவர் என்னை காப்பாற்ற ஒரு சிலந்தியை அனுப்புகிறார்" என்று சலித்து கொண்டான்.

ஆண்டவரின் அரண்: சிறிது நேரத்தில் எதிரிகள் அந்த பழைய வீட்டை கண்டுபிடித்து உள்ளே நுழைந்து ஒவ்வொரு அறையாக சோதனை போட ஆரம்பித்தார்கள். தான் பதுங்கியிருந்த இடத்திற்கு வெகு அருகில் அவர்கள் நடமாடுவதை அவனால் உணர முடிந்தது. சிலந்தி வலையை ஒதுக்கியபடி உள்ளே நுழைய இருந்த வேளையில் அவர்களின் தலைவன், "அங்கே சிலந்தி வலை அடைத்து கொண்டிருக்கிறது. ஆகவே அங்கே யாரும் இருக்க முடியாது. நாம் வேறு இடம் சென்று தேடுவோம்" என்று கட்டளை யிட்டான்.

நம்பிக்கை வீண்போகவில்லை: போன உயிர் திரும்பி வந்ததுபோல அந்த வீரன் உணர்ந்தான். ஆச்சரியத்தில் உறைந்த அவன், தான் இருந்த இடத்திலேயே சரிந்து மண்டியிட்டு கடவுளை நோக்கி, "ஆண்டவரே! விசுவாசத்தில் எனக்கு ஏற்பட்ட தளர்ச்சிக்காக என்னை மன்னியும்!" என்று மன்றாடினான்.

முடியாதது ஏதுமில்லை: கடவுளால் முடியாதது என்று எதுவும் கிடையாது. சோதனை வேளையில் நம் மனம் தளரும்போது, கடவுள் தாம் நம்பமுடியாத அதிசயமான வழியில் நம்மை துன்பங்களிலிருந்து மீட்டு காத்தருள்வார்.

நற்செய்தி: "மனிதரால் இது இயலாது. ஆனால் கடவுளால் எல்லாம் இயலும்" என்றார். (மத்.9:26) ●

புதுடெல்லியிலிருந்து சர்வவியாபி வார இதழுக்கான RNI புதுப்பித்தல் சான்றிதழ் பெறுவதில் காலதாமத மாவதால், சில மாதங்களாக அஞ்சல் கட்டணம் சலுகை நிறுத்தப்பட்டு உள்ளது. விரைவில் இந்த புதுப்பித்தல் சான்றிதழ் பெற செபியுங்கள். சர்வவியாபிக்கு சந்தா மற்றும் உதவி தொகை அனுப்புகிறவர்கள் MO / Cheque / DD/ வங்கி கணக்கு மூலம் செலுத்தலாம்.

வங்கி கணக்கு விவரம்

BANK NAME	:	IOB-PONDICHERRY MAIN JAWHARLAL NEHRU STREET, Pondy-1.
A/C Name	:	MISSION PRESS
A/C. No.	:	007002000000123
IFSC	:	IOBA0000070

தொடர்புக்கு: 0413/2334360; 9600571252 -- ஆசிரியர்.

சிறந்தவன் யார்?

– G. போனிஃபாஸ் ஜூலியன், புதுவை–9.

ஒரு வயதான தந்தை இருந்தார். அவருக்கு மூன்று மகன்கள். சமீபத்திலே அவருடைய மனைவியானவர் தவறி விட்டார். இந்த மூன்று மகன்களும் தந்தையை பாசத்தோடு கண்காணித்து வந்தார்கள். இவர்களுக்கு திருமணமும் செய்யப்பட்டு விட்டது. எல்லோரும் கூட்டு குடும்பமாக தந்தையினுடைய தலைமையிலே செயல்பட்டு வந்தார்கள். தந்தை செல்வந்தர் ஏராளமான சொத்துகள் இருந்தது. தந்தைக்கு தன்னுடைய காலத்திற்கு பின்னால் தன் சொத்துகளை கொடுக்க வேண்டுமென்று எண்ணினார்.சொத்தை மூன்றாக பிரித்து ஒவ்வொருத்தருக்கும் ஒரு பாகம் கொடுத்து விடலாம். ஆனால் இதை அவர் செய்ய விரும்பவில்லை. இந்த மூவரில் யார் புத்திசாலி என தேர்ந்தெடுத்து அவனுக்கு அதிகப்படியான சொத்துக்களை கொடுக்க எண்ணினார். இதற்கு ஒரு பரிட்சை வைத்து அவர்களுடைய புத்திசாலிதனத்தை தெரிந்து கொள்ள ஆசைப்பட்டார். யார் அதிக புத்திசாலி என்பதுதான் தந்தையினுடைய ஆதங்கம். இதற்கு மூன்று மகன்களும் சம்மதித்தார்கள். இந்த பரிட்சையினுடைய நிபந்தனை என்னவென்றால் ஒவ்வொருவருக்கும் ஒரு அறை கொடுக்கப்படும். அதில்அவர்கள் யார் உள்ளே போகாதபடி உதாரணத்திற்கு பல்லி, எலிகள் கூட செல்ல முடியாத அளவிற்கு அந்த ரூமை நிரப்பி கொள்ள வேண்டும். கதவை திறந்தவன் உள்ளே நுழைய முடியாது. இதுதான் நிபந்தனை. மூன்று பேரும் யோசித்தார்கள்.ஒரு பையன் பஞ்சு மூட்டைகளை வாங்கி வந்து அந்த அறையை அடைத்தான். அதற்காக பஞ்சு வாங்க நிறைய செலவு செய்தான். தனக்குத் தான் அதிகப்பட்டியான சொத்துக்கள் கிடைக்கும் என்று எண்ணினான்.

இரண்டாவது மகனோ, சற்று வித்தியாசமானவன் அதிக செலவு செய்து இந்த போட்டியில் பங்கேற்க விரும்பவில்லை. குறைந்த செலவில் ஊரில் உள்ள குப்பைகளை கொண்டு வந்து தன்னுடைய அறையை நிரப்பி விட்டான். மூன்றாவது பையன் இந்த போட்டிக்காக ஒரு பத்து ரூபாய் மட்டும் செலவு செய்தான். அதாவது ஒரு மெழுகுதிரியை வாங்கி வந்து அதை அறையின் நடுவில் ஏற்றி வைத்தான். குறிப்பிட்ட நாளில் தந்தை வந்து ஒவ்வொரு அறையாக சோதனை செய்தார். முதல் இரண்டு மகன்களை காட்டிலும் மூன்றாம் மகன் வெற்றி பெற்றதாக அறிவித்தார். முதல், இரண்டு மகன்களும் அறைகளை எவ்வளவு தான் அடைத்து வைத்திருந்தாலும், அதில் சற்று இடைவெளி இருக்கத் தெரியும். மூன்றாவது பையனோ, ஒரு மெழுகுத் திரியால் அறையையே வெளிச்சத்தை உண்டாக்கி இருளை போக்கினான். அங்கு இருள் இருக்க இடமில்லை. இதில் யார் புத்திசாலி என்பதை அவர்களே தேர்ந்தெடுத்து கொண்டார்கள். தந்தை முதலில் கூறியது போல் அதிகப்பட்டியான சொத்தை வெற்றிப் பெற்றவனுக்கு கொடுக்காமல் மூவருக்குமே சமபங்கு என்று சொல்ல, பிள்ளைகள் கைதட்டி வரவேற்றார்கள். இதை தந்தை செய்தது அவர்களை சோதிப்பதற்காகவும், புத்திசாலிகளாக மாற்றுவதற்கும் உள்ள ஏற்பாடு தான். இது விளையாட்டாகவே முடிந்துவிட்டது.

மாணவர்கள் புத்திசாலித்தனத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மார்க் ஓரியன்டாக இருக்கக் கூடாது. அது ஏட்டு சுரைக்காயாய் மாறிவிடும். மாணவர்கள் மற்றவர்களுக்காக ஒளியாக இருக்க வேண்டும். இதை அடைய அவர்கள் என்ன செய்ய வேண்டும். மூவர் சொல்லுக்கு கீழ்ப்படிய வேண்டும். 1) பெற்றோர், 2) ஆசிரியர், 3) பெரியவர்கள். ஆலயம் சென்றால் கடவுளை தரிசிக்கலாம். ஆனால் வீட்டிலேயே இரண்டு நடமாடும் தெய்வங்கள் இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை கேட்க வேண்டும். களிமண்ணாய் இருந்தவர்களை சிற்பமாக மாற்றுபவர்கள் ஆசிரிய பெருங்குடி மக்கள். அவர்கள் சொல்லுக்கு கீழ்படிந்து படிக்க வேண்டும். பெரியவர்கள் அவர்களிடத்தில் அனுபவம் என்ற ஒரு சொத்து இருக்கிறது. அதை பயன்படுத்தி அவர்கள் சொல்படி நடக்க வேண்டும். இதை செய்தால் புத்திசாலியாவது மட்டுமல்ல சமூகத்தில் உயர்ந்தவனாக வாழலாம். ●

விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி



திரு.அருமைதுரை (எ) ழீல் பெர்தினான் கட்சிராயர்

மலர்ந்தது : 31-07-1909

உதிர்ந்தது : 22-04-1972

திருமதி. ஆரோக்கியமாரி கட்சிராயர்

(W/o. Late. ழீல் பெர்தினான் கட்சிராயர்)

மலர்ந்தது : 30-08-1924

உதிர்ந்தது : 05-02-2006

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

இறைவா! தங்கள் வாழ்க்கையில் இறை வார்த்தையின்படி நடந்து "உண்மையான முறையில் உழைத்து முன்னேற வேண்டும்" என்கிற உன்னதமான கருத்தை எங்களுக்கு கற்றுத் தந்த எங்களது அன்பு பெற்றோர் திரு. அருமைதுரை [எ] ழீல் பெர்தினான் கட்சிராயர், திருமதி. ஆரோக்கியமரி கட்சிராயர் அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும், ஆமென்.- *கர்.மங்.திரி.*

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 22-4-2019 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு வில்லியனூர், புனித லூர்து அன்னை ஆலயத்திலும், மாலை 6.00 மணிக்கு திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும், நிறைவேற்றப்படும் பாடல் திருப்பலியில் கலந்துகொண்டு செபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அவர்கள் பிரிவால் துயருறும் மகன்கள்
கிளமெண்ட் ஜோசப் கட்சிராயர்
ஹென்றி கட்சிராயர்,
தொன்போஸ்கோ கட்சிராயர்
மற்றும் மருமகள்கள், மகள்கள்,
மருமகன்கள், பேரப்பிள்ளைகள்,
கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.
புதுவை.

விண்ணக வாழ்வின் 9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 26-4-1934



மறைவு: 15-04-2010

Mr.A.Xavier Arputham

(Retd. Commissioner, T.R.Pattinam, Karaikal)

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 15-4-2019 திங்கள் காலை 6.15 மணிக்கு T.R.பட்டினம் தூய பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்திலும், மாலை 5.30 க்கு புதுவை ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்திலும் நிறைவேற்றப்படும் மரித்தோர் பாடல் திருப்பலியில் பங்குகொண்டு வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் மீளா துயருறும்
மனைவி: ழனேத் சேவியர்
மருமகள், மகள்கள், மருமகன்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.

விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்: 15-09-1950

விண்ணில்: 05-04-2017

Sr.Mary Rajam

பொன்னை உலையிலிட்டுப் புடமிடுவது போல அவர் அவர்களைப் புடமிட்டார். எரிபலிபோல் அவர்களை ஏற்றுக்கொண்டார். – சா.ஞா.3:6

இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக 5–4–2019 வெள்ளிக்கிழமை அரியாங்குப்பம், விசிட்டேஷன் இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இவரது ஆன்ம சாந்திக்காக ஜெபிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பிரிவால் வருந்தும்
உறவினர்கள்
குடும்பத்தினர்.
எகால் (மையனூர் பங்கு)

விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம்: 13-7-1968

மறைவு: 19-03-2019

EUGENE MARIA AUGUSTINE

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக் காக 17-4-2019 புதன் காலை 6.30 மணிக்கு புதுவை, வினோபா நகர், புனித சூசையப்பர் ஆலயத்தில் நிறைவேற்றப்படும் மரித்தோர் பாடல் திருப்பலியில் பங்குகொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக ஜெபிக்க கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மகன்கள், தாய்,
சகோதர, சகோதரிகள்,
உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.

நூற்றாண்டு பிறப்பு நினைவு அஞ்சலி

தோற்றம்
15-04-1919

நூற்றாண்டு
15-04-2019

பணிக்கன்குப்பம், முத்துக்கண்ணு

திரு. அ. அந்தோனிசாமி. B.A.

"சீரியதோர் பந்தயத்தில் ஓடினேன் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைப் பாதுகாத்தேன்." 2திமோ.4:7

விண்ணகத்தில் சதப்பிறப்பை காணும் அன்பு தந்தையே
மண்ணுலகிலிருந்து உம் பிள்ளைகள் வாழ்த்துகிறோம்
பதின்மரைப் பெற்று பாரினில் உயர்த்திய தகப்பனே
பாருள்ளவரை உமை நாங்கள் மறவோம்.
தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து
தன்னிகரில்லா மாசற்ற கல்வியை தந்து எம்முள்
எழுவரை அரசுப்பணி ஏற்கச் செய்தவரே
ஏழேழு ஜென்மும் உமை மறவோம்

நேரிய வழியில் வாழ்ந்த உத்தமரே
நேர்மையை இரு கண்களாய் கொண்டவரே
உமைப்போல் யார் வாழ இயலும்.
அன்பை அகலாக்கி, அறிவை திரியாக்கி
அகிலத்தில் ஒளிரச் செய்தவரே
உமக்காய் நாங்கள் மன்றாடுகிறோம்,
நித்திய ஒளி உம்மீது ஒளிர்வதாக.

நினைவுத் திருப்பலி:

காலை 6.00 மணிக்கு, புனித கார்மேல் அன்னை ஆலயம் - கடலூர்-1.
காலை 6.00 மணிக்கு, புனித சூசையப்பர் ஆலயம், கடலூர் - 2.
காலை 6.00 மணிக்கு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயம், நெல்லித்தோப்பு.
காலை 6.00 மணிக்கு, விசிடேஷன் சிற்றாலயம், அரியாங்குப்பம்.
காலை 6.00 மணிக்கு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயம், பணிக்கன்குப்பம்.

பிரிவால் துயருறும்

மகள்: Sr.**அனிதா** FIHM, Visitation, Ariankuppam.

மனைவி, மகள்கள், மகன்கள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.
பணிக்கன்குப்பம் முத்துக்கண்ணு குடும்பத்தினர்.

முதல் பக்கத் தொடர்ச்சி..

2) எல்லா மக்களுக்கும் குறிப்பாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் முழுமையான பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும்.

3) பழங்குடியினரின் நிலம், நீர் மற்றும் வனப்பகுதிகளில் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட உதவ வேண்டும்.

4) தலித் மக்களுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தவும், அவர்கள் எவ்விதத்திலும் பாகுபடுத்தப்படாமலிருக்க உறுதியளிக்கவும், அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்கப்படவும் உறுதிசெய்ய வேண்டும்.

5) மதங்களுக்கிடையே கலந்துரையாடல் மற்றும் புரிந்துணர்வுகள் மூலம் சமூக ஒற்றுமையையும் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வையும் வளர்க்க வேண்டும்.

6) சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது, வருங்கால வழிமரபினருக்காக இயற்கை வளங்களைப் பாதுகாப்பது ஆகியன வற்றுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இவை யாவும் தேசிய தேவைகளாகும். அந்தந்த பகுதி சேர்ந்த தேவைகளையும் குறிப்பிட்ட தேவைகளையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

ஆலயத்திலும் இல்லத்திலும் செபிக்க உங்களை வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறோம், இதனால் இன்றைய சூழலில் நம் இந்திய நாட்டுக்கும், அனைவரின் பொதுவான நலன்களுக்கும் தேவையானது என்ன என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள இயலும். நல்லதொரு அரசுக்காக நாம் அனைவருமே உறுதியாக செபிக்க வேண்டும். கடவுள் தம் மகனை நாம் வாழ்வு பெறும்பொருட்டு அனுப்பினார், அவ்வாழ்வினை முழுமையாகப் பெற வேண்டுமென்றே அனுப்பினார் (யோவா.10:10). நமது ஆண்டவரின் வல்லமை யோடு, தூய ஆவியாரால் வழிநடத்தப்பட்டு, ஒரு வளமான இந்தியாவுக்காக நாம் அனைவரும் ஒருமித்து உழைக்க வேண்டும். நமது அன்பு அன்னை புனித கன்னிமரியாவிடம் நமது நாட்டை ஒப்படைப்போம். அவர் நமது நாட்டினை என்றும் காப்பாராக, இறைவனின் அருளை மிகுதியாக நமக்குப் பெற்றுத் தருவாராக. இறைவன் நம் இந்திய தேசத்தை ஆசீர்வதிப்பாராக.

+ ஆஸ்வால்டு கிராசியஸ்
மும்பை கர்தினால்
தலைவர், இந்திய ஆயர் பேரவை.
தமிழில்: ஆசிரியர்.

"அன்றைக்கே சொன்னேன்!"

"42 ஆண்டுகளுக்குமுன் சர்வவியாபியில்"

"உனது அரசாங்கத்தை நீ நடத்து: பல ஆண்டுகளுக்கு முன்பே இக்கருத்தை வில்லியம் பென் என்பவர் வலியுறுத்தினார். (பிறர் பார்த்துக் கொள்ளட்டும். பிறர் செய்யட்டும் என்ற உணர்வு ஒவ்வொரு குடிமகனும் தவிர்க்க வேண்டிய உணர்வுகளில் ஒன்று என்றால் பொருத்தமே). எந்த ஒரு அரசையும் ஆட்சியையும் ஒரு கடிகாரத்துக்கு ஒப்பிடலாம். ஒரு கடிகாரத்தை மனிதன் முடுக்கி விடுகிறான், அந்த இயக்கு சக்தியில்தான் அந்த கடிகாரம் ஓடுகிறது. இதேப்போன்று ஒவ்வொரு குடிமகனும் தான் கொடுக்கும் 'வாக்கு' என்ற அசைவினால் தனது அரசை ஆட்சியை இயக்குகின்றான். எனவே மனிதர்கள் மீது அரசு சார்ந்துள்ளதே தவிர அரசின் மீது குடிமகன் சார்ந்திருப்பது இல்லை. மனிதர்கள்தான் அரசை உருவாக்குகின்றார்களே தவிர அரசு மனிதர்களை உருவாக்குவது இல்லை. எனவே எந்த ஒரு அரசும் ஆட்சியும் நல்முறையில் செயல்பட ஒவ்வொரு குடிமகனும் ஒத்துழைக்க வேண்டும். எனவேதான் இளமையி லிருந்தே ஒவ்வொரு குடிமகனின் உள்ளத்திலும் அரசியல் உணர்வைத் தகுந்தமுறையில் ஊட்ட வேண்டும்." ("உரிமை யின் சிந்தனைகள்"-சர்வவியாபி 10.8.1977 பக்.3.)

(தொகுப்பு ஆசிரியர்.)

Published and Printed by Fr.C.Antoni Roche **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001. Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: **Rev. Fr. C.Antoni Roche.**